நிகழும் ஸ்ரீ விஜய நாம ஸம்வத்ஸரத்து
ஸரஸ்வதீ பூஜா / விஜயதஶமி நிர்ணயம்

வித்வான் ஸ்ரீரமணஶர்மா,
காஞ்சீ ஶங்கர மடம், நெரூர் அக்ரஹாரம்,
கரூர்.

ஆஸ்திகர்கள் அனைவருக்கும் உண்டான அனுஷ்டானங்களின் நாட்களை தர்ம ஶாஸ்த்ர ப்ரகாரம் நிர்ணயித்துத் தெரிவிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் பரம காருணிகர்களான ஸ்ரீ காஞ்சீ காமகோடி மூலாம்நாய ஸர்வஜ்ஞ பீடாதீஶ்வரர்கள் பல வருடங்களாக வருடந்தோறும் சாதுர்மாஸ்ய ஸமயத்தில் ஸ்ரீமடத்தில் தர்ம ஶாஸ்த்ர வித்வான்களையும் பஞ்சாங்க கர்த்தர்களையும் அழைத்து ஸதஸ் நடத்துகிறார்கள்.

அவ்வண்ணமே சென்ற 5113 கதகலி நந்தன ஸூ ஆடி மீ 6, 7 ௳ (2012-ஜூலை-21, 22) அன்று காஞ்சீபுரம் ஸ்ரீமடத்தில் ஸதஸ் நடந்தது.

நிகழும் விஜய வருடத்திற்காக மற்ற (சித்திரை மீ 12 ௳ 2013 ஏப்ரல் 25 பின்னிரவு ஏற்பட்ட சந்த்ர க்ரஹணம் முதலிய) விசாரங்களுடன் முக்கியமாக நவராத்ரி விசாரமும் செய்யப்பட்டது.

இதில் ஸரஸ்வதீ பூஜா விஷயமாக கீழ்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

2013-அக்-12 ஆஶ்வயுஜ ஶுக்ல அஷ்டமி மதியம் 3:26 மணிக்கு முடிகிறது, அதாவது காஞ்சீபுர க்ஷேத்ரத்திற்கு உதயாதி நாழிகை 23-25. மறுநாள் 2013-அக்-13 அன்று நவமி மதியம் 1:18 மணிக்கு முடிகிறது. அதாவது காஞ்சீபுரத்தில் உதயாதி 18-03 நாழிகை.

வைத்யநாத தீக்ஷிதீயம் திதி நிர்ணய காண்டத்தில் दुर्गासरस्वतीव्रतादौ पूर्वैव ग्राह्या அதாவது ஸரஸ்வதீ பூஜைக்கு நவமி திதி கண்ட திதியாக (இரண்டு பகல்களில் பிரிந்ததாக) இருந்தால் முதல் நாளே க்ரஹிக்கவேண்டும். அதே போல் தர்மஸிந்துவிலும் (ஸத்குரு பதிப்பாளர்கள், புதுதில்லி, 1986 ம் வருடத்து மறுபதிப்பு, 83 ம் பக்கம்) बलिदानव्यतिरिक्तविषये पूजोपषणादौ अष्टमीविद्धा ग्राह्या, सा च यदि अष्टमीदिने सायं त्रिमुहूर्ता स्यात् तदैव ग्राह्या, त्रिमुहूर्तन्यूनत्वे परैव ग्राह्या, महानवमीप्रयुक्तबलिदाने तु दशमीविद्धा என்றுள்ளது. அதாவது அஷ்டமியுள்ள

தினத்தன்று சாயங்காலம் மூன்று முஹூர்த்தம் நவமி இருந்தால் முதல் நாள் ஸரஸ்வதி பூஜை. இதற்குக் குறைந்தால் அல்லது அன்று பகலில் நவமியே இல்லையென்றுல் மறுநாள்தான். ஆனுல் இது நவராத்ரி பூஜா பத்ததியில் உள்ள மஹாநவமி பலிதானத்திற்குப் பொருந்தாது, அதற்கு நவமியானது தஶமியுடன் கூடியிருக்கவேண்டும். ஸரஸ்வதீ பூஜைக்கோ அஷ்டமியுடன் கூடவேண்டும்.

இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவெனில் 2013-அக்-12 அன்று காஞ்சீபுர க்ஷேத்ரத்து அஹர்மானம் 29-25 நாழிகை. 15 முஹூர்த்தம் பகல் ஆகையால் மூன்று முஹூர்த்தம் என்பது இதன் ஐந்தாம் பாகம், அதாவது 05-53. இவ்வளவு நவமி இருந்தாலே போதும், அன்றே ஸரஸ்வதி பூஜை. இதற்கு மிகுதியாகவே 23-25 க்கு திதி முடிந்த பிறகு 29-25 வரை 6 நாழிகை நவமி உள்ளது. ஆகவே ஸந்தேஹம் இன்றி அன்றுதான், அதாவது 2013-அக்-12 அன்றுதான் ஸரஸ்வதீ பூஜை.

இது த்ருக்கணித ப்ரகாரம். வாக்ய ப்ரகாரமோ அன்று அஷ்டமி 26 நாழிகை. ஆகையால் ஸாயங்காலம் சுமார் மூன்றரை நாழிகை மட்டுமே நவமி இருப்பதால் வாக்யகணிதப்படி மறுநாள் 2013-அக்-13 அன்றுதான் ஸரஸ்வதி பூஜை.

அடுத்து விஜயதஶமி.

மேற்கூறியபடி த்ருக்கணிதப்படி 2013-அக்-13 அன்று நவமி 18-03 நாழிகை. நக்ஷத்ரமோ உதயத்தில் 1 நாழிகைக்குக் குறைவாக உத்தராஷாடா பிறகு சுமார் 57 நாழிகை வரையில் ஶ்ரவணம். மறுநாள் அக்-14 அன்று தஶமி சுமார் 13 நாழிகை, உதயத்தில் ஶ்ரவணம் இல்லை. வாக்ய கணிதப்படி முதல் நாள் நவமி 20-19, உத்தராஷாடா 04-35, மறுநாள் தஶமி 14-53 ஶ்ரவணம் 00-52.

இவ்விஷயத்தில் நிர்ணய ஸிந்துவில் (நிர்ணய ஸாகர பதிப்பு 141, 142 பக்கங்கள்) नवमीशेषयुक्तायां दशम्याम् अपराजिता । ददाति विजयं देवी पूजिता जयवर्धिनी என்றும் परदिने अपराह्णे श्रवणासत्त्वे तु सर्वपक्षेषु पूर्वैव என்றும் अपराह्णो मुख्यः कर्मकालः तत्रैव पूजाद्युक्तेः என்றும் கூறப்பட்டுள்ளது. அதாவது அபராஹ்ணமே பூஜைக்கு காலமாதலால் காலையில் நவமியின் ஶேஷம் இருந்து அபராஹ்ணத்தில் தஶமி இருக்கும் தினத்தன்று விஜயதஶமி அநுஷ்டானம். அவ்வாறே தர்ம

ஸிந்துவிலும் (85ம் பக்கம்) यदा पूर्वदिने एव अपराह्णव्याप्ता परदिने च श्रवणयोगाभावः तदापि पूर्वैव என்று உள்ளது. ஆகவே 2013-அக்-13 அன்றுதான் விஜயதஶமி.

அதாவது நவராத்ரிக்கு பூஜை செய்த தேவியை (கலஶ ஸ்தாபநம் முதலியதை) அன்று விஸர்ஜநம் செய்யவேண்டும். இதனுல் ஸரஸ்வதீ விஸர்ஜனமும் அன்றே என்பது தெளிவு.

இவையே ஸரஸ்வதீ பூஜை, விஜயதஶமி விஷயமாக தர்மஶாஸ்த்ர விசாரம் செய்து ஸ்ரீமடத்து ஸபையில் வித்வான்களால் தீர்மானம் செய்யப்பட்டு பஞ்சாங்க கர்த்தர்களுக்கு தெரிவிக்கப்பட்ட விஷயங்களாகும். கிடைத்த க்ரந்த ப்ரமாணங்களின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட இவ்விஷயங்களில் சில பல காரணங்களால் ஆஸ்திகர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டது வருந்தத்தக்க விஷயம். ஸ்ரீமடத்து பஞ்சாங்கத்தில் த்ருக்கணிதத்திற்கு அளிக்கப்பட்ட தீர்மானங்கள் சரியாக அப்படியே அனுஸரிக்கப்பட்டன என்பது கவனிக்கத்தக்கது.

*

மேலும் சில விவரங்களை இதனுடன் தெரிவிக்கவிரும்புகிறேன்.

விஜயதஶமி அன்று தேவியை விஸர்ஜநம் செய்த பிறகு பிறகு அபராஜிதா பூஜனம், ஊர் எல்லையைத் தாண்டுவது, வன்னி மரத்தைப் பூஜிப்பது, யாத்திரைக்குக் கிளம்புவது முதலியன செய்யத்தக்கன என்று இன்னும் பல விவரங்களை தர்ம ஸிந்து முதலிய தர்மஶாஸ்த்ர க்ரந்தங்கள் அளிக்கின்றன.

மேலும் இன்று லோகத்தில் பரவலாக விஜயதஶமியன்று வித்யாரம்பம் என்று ப்ரஸித்தமாக இருக்கிறது. தர்ம ஶாஸ்த்ரங்களில் மேற்கூறிய அனுஷ்டானங்கள் தான் விஜயதஶமியை முன்னிட்டு விதிக்கப்பட்டிருக்கின்றன. வித்யாரம்பமோ இந்த பட்டியலில் இடம்பெறவில்லை. புஸ்தக மண்டலத்தில் ஸரஸ்வதி தேவியை வைத்து ஆவாஹனம் செய்வதால் அவளை உத்வாஸனம் செய்யும் தினத்தன்று அவளது ப்ரஸாதமாக அவளது அனுக்ரஹத்துடன் வித்யாப்யாஸம் செய்துகொள்வது ஶ்ரேஷ்டம் என்ற பக்திபாவத்தில் ஏற்பட்டதே என்பது வித்வான்கள் கருத்து.

பெரும்பாலும் விஜயதஶமியும் ஸரஸ்வதி யதாஸ்தானமும் ஒன்ருக வருவதால் விஜயதஶமியன்று ஆரம்பிக்கும் அனைத்து காரியங்களுக்கும்

ஜயம் உண்டு என்ற ஶாஸ்த்ரத்தாலும் விஜயதஶமி அன்று வித்யாப்யாஸம் என்ற வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ஸரஸ்வதீ விஸர்ஜனத்துக்குண்டான ப்ரமாணங்களும் விஜயதஶமிக்குண்டான ப்ரமாணங்களும் வேறாகையால் வரப்போகும் வருடங்களில் ஸரஸ்வதீ விஸர்ஜனமும் விஜயதஶமியும் தனித்தனியே வரும் வாய்ப்பு உண்டு என்பதை கவனிக்கவேண்டும்.

இதுபோலவே உதயத்தில் தஶமி இருப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்கின்றனர் பலர். மேற்கூறிய தர்ம ஶாஸ்த்ர வாக்யங்களோ தேவி பூஜைக்கு அபராஹ்ண வ்யாப்திதான் ப்ரதானம் என்பதைக் தெளிவாகக் காட்டுகின்றன. உதய காலத்தில் இருக்கும் விஜயதஶமியின் புச்சத்தை அரசர்களின் பட்டாபிஷேகத்திற்குத்தான் விதித்திருக்கிறது. மேலும் அன்றைய தினம் அபராஹ்ணத்தில் ஶ்ரவணம் இருந்தால் அன்று விஜய யாத்ரை என்ற விஷயம் நிர்ணய ஸிந்துவில் ஸூசிக்கப்படுகிறது. ஆனால் இவையெல்லாம் இப்பொழுது விசார விஷயங்கள் அல்ல. நாமோ இன்று விஜயதஶமி என்பதை தேவி பூஜைக்கும் ஜயம் கோரி காரியங்கள் தொடங்குவதற்கும்தான் அனுஷ்டிக்கிறோம். ஆக இவ்வருடத்திய விஜயதஶமியானது முதல் நாள் அதாவது அபராஹ்ணத்தில் தஶமியைக் கொண்ட 2013-அக்-13 அன்றுதான் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

லோகத்திற்கெல்லாம் ஶாஸ்த்ரப்படி அனுஷ்டானத்தை எடுத்துச்சொல்லவேண்டுமென்பதற்காக பிரதி வருடமும் ஸபை நடத்துவிக்கும் நமது பெரியவாளின் அபார கருணையை நினைத்து அவர்களை வணங்கி நாம் அனைத்து புருஷார்த்தங்களையும் பெறுவோமாக.

-*-